# பகவத் --- பாகவத எளிமை

அனைத்தையும் கடந்தும் அனைத்துக்குள்ளும் உறையும் கடவுளாகிய ஸ்ரீமந் நாராயணன் நமக்காக - தம் அடியவருக்காக ஐந்து நிலைகளில் எழுந்தருளி அருளுகிறான். அவன் தான் ஒரு எட்டாக்கனியல்ல, மிகவும் எளியன், அடியார்க்கு அடியன் என்பதை பல லீலைகளால் நமக்கு உணர்த்துகிறான். இதனை ஸ்ரீ இராமானுஜர், ஸ்ரீ மணவாள மாமுனிகள் வாழ்க்கையில் நடந்த ஒரு சில நிகழ்ச்சிகள் மூலம் அறிந்துக் கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஸ்ரீ இராமானுஜர்

இவரை ஜகதாச்சார்யராக கொண்டாடுகிறோம். ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தை நிலைநாட்டி பரப்பியவர். "ஸ்ரீ இராமானுஜ தரிசனம்," என்று கொண்டாடுகிறோம். ஸ்ரீவைஷ்ணவ சம்ப்ரதாயத்திற்கு ஆதார நிலமாக இருப்பது பூலோக வைகுண்டமாகிய உபய காவேரிக்கு நடுவே இருக்கும் ஸ்ரீரங்கம் க்ஷேத்திரமாகும்.

இங்கு ஸ்ரீரங்கனுக்கு திருப்பாவாடை உற்சவம் மிகப்பிரசித்தமாக நடைபெறும். அதில் ஸ்ரீரங்கநாதர் முன்பு ஒரு பெரிய துணியை விரித்து அதில் ஒரு சிறிய குன்று போல நிறைய கதம்ப சாதம் படைப்பார்கள். அப்போது அங்கிருக்கும் பெரியவரான ஸ்ரீஇராமானுஜரை ஜீயா ! என்று அழைப்பார்கள், அவரும் திரிதண்டியுடன் வந்தேன்! என்று அங்கு சென்று தீர்த்தப் பிரசாதம் கொண்ட பிறகு பிரசாதத்தை அனைவருக்கும் விநியோகிப்பார்கள். இந்த உற்சவம் ஒவ்வொரு வருடமும் நடைபெறும்.

ஒரு வருடம் வெளியூர் சென்றிருந்த எம்பெருமானார் திருப்பாவாடை உற்சவத்திற்காக ஸ்ரீரங்கம் திரும்பிக்கொண்டிருந்தார். வழியில் கொள்ளிடக்கரையில் சில சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருந்ததைக் கண்டார். சிறுவர்கள் மணலில் சிறு கூடு போன்று ஒன்றைக்கட்டி அதில் ஒரு

குச்சியை வைத்து அதனை ஸ்ரீரங்கனாக பாவித்தனர். ரங்கனுக்கு முன் மணலால் செய்த சிறு சிறு வட்டில்களை வைத்து அங்கு அடுத்த நாள் நடைபெறப்போகும் திருப்பாவாடை உற்சவத்தை விளையாட்டுப் போல அரங்கேற்றிக்கொண்டிருந்தனர். ஒரு சிறுவன் தன்னை கோயில் அர்ச்சகராகவும் ஒரு சிறுவன் தன்னை ஜீயரைப்போன்றும் பாவித்து அர்ச்சக சிறுவன் ஸ்ரீரங்கனின் (அதாவது குச்சி) முன்பு மணலால் ஆன உணவைப் படைத்து கண்டருளப்பண்ணி ஜீயா ! என்று அழைக்க ஜீயரைப்போலிருந்த சிறுவன் திரிதண்டியுடன் இதோ வந்தேன் ! என்று அங்கு ஓடி வந்தான் .

ஜீயா என்று அழைத்ததும் இராமானுஜர் தன்னையே அழைத்தது போல ஓடிச்சென்று தீர்த்தம் கொள்ள தம் கையை நீட்டினார். என்னடா பெரிய கை நீளுகிறதே என்று அர்ச்சக சிறுவன் தன் தலையை உயர்த்திப்பார்க்க அவன் பெரிய ஜீயரையைக் கண்டான். அப்போது எம்பெருமானாருடன் வந்தவர்கள் ,"என்ன சுவாமி சிறுவர்கள் எதோ விளையாடிக்கொண்டிருக்கிறார்கள் தாங்கள் சென்று கரத்தை நீட்டலாமா", என்று வினவ அதற்கு அவர் "அடியேன் அந்த மண்குவியலில் ஸ்ரீரங்க விமானத்தையும் அங்கிருக்கும் குச்சியில் ஸ்ரீரங்கனையும் கண்டேன். இந்த சிறுவர்களின் தூய்மையான பக்திக்கு ஸ்ரீரங்கனே இங்கு வந்து விட்டான். இதோ ! ஸ்ரீ ரங்கனின் திருப்பாவாடை உற்சவம் இன்றே நடைப்பெற்று விட்டது", என்று சொல்லி அடுத்த நாள் நடைபெறவிருந்த உற்சவத்தை நிறுத்த சொல்லி விட்டார்.

என்னே!! ரங்கனின் எளிமை அதைவிட அவனுடைய அடியவரான இராமானுஜரின் எளிமை. இந்த உயரிய பண்பாலேயே இராமானுஜரும் ஒரு பங்குனி உத்திரத்தன்று ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாதரிடம் அவன் அடியவருக்கு வைகுண்ட ப்ராப்தி அருள வேண்டும் என்று விண்ணப்பிக்க ஸ்ரீரங்கனும் "தந்தோம்" என்று அருளினார். தூய்மையான பக்தி கொண்ட அடியவருக்கு அவன் எளியன், அடியன், கேட்கும் வரங்களைக்கொடுப்பவன் என்பதை இந்த நிகழ்ச்சி மூலம் நமக்கு உணர்த்தி விட்டான்.

## ஸ்ரீ மணவாள மாமுனிகள்

ஆதிசேஷனின் அவதாரமாகிய ஸ்ரீ இராமாநுஜரைப் போன்றே அவரின் மற்றொரு அவதாரமாக மணவாள மாமுனிகள் ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தை இப்புவியில் மீண்டும் பொலிவடைய செய்ய அவதரித்தார் என்பது ஆன்றோர் வாக்கு. மணவாள மாமுனிகளின் வாழ்க்கை வரலாற்றை அறிந்துக் கொள்ள "யதீந்திர ப்ரவண பிரபாவம்" என்ற நூல் நமக்கு வழிகாட்டியாக உள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதிலிருந்து இதோ ஒரு சில துளிகள்.

இவருக்கு அவரது பெற்றோர் இட்ட பெயர் அழகிய மணவாளர். திருக்குருகூரில் வாழ்ந்து வந்த திருவாய்மொழிப்பிள்ளை என்ற ஆச்சார்யரின் சிஷ்யரானார். அவரிடம் அருளிச் செயல்களையும் அவற்றின் வ்யாக்யானத்தையும் திறம்பட கற்றார் ஆச்சார்யரின் ஆணைக்கிணங்கி ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்துக்கு தலைமை இருப்பிடமான ஸ்ரீ ரங்கத்திற்கு சென்றார்.

அழகிய மணவாளர் ஸ்ரீ ரங்கத்தில் வாழ்ந்து வந்த காலத்தில் அங்கு ஸ்ரீ ரங்கனுக்கு திருவாராதனம் செய்யும் தலைமை அர்ச்சகரான உத்தம நம்பி என்பவர் அதை ச்ரத்தையுடன் செய்வதில்லையே என்று அவர் மனதிற்கு பட்டது. அப்போது அங்கிருந்த ஜீயருக்கு தெரிவிக்க அவரும்,"நீரே வந்து விட்டீரே! நீரே அவரை நீக்கி வேறு ஒருவரை நியமித்து விடும்," என்று கூறினார். அதற்கு மணவாள மாமுனிகள்,"அந்த அர்ச்சகர் செய்த தவத்தால் அவருக்கு ஸ்ரீ ரங்கனுக்கு திருவாராதனம் செய்யும் பாக்கியம் கிடைத்துள்ளது. அதனால் அவரை திருத்தி பணிக் கொள்ளவேண்டும் என்று அந்த அரங்கனிடமே விண்ணப்பித்து பிரபத்தி செய்வோம்,"என்று கூறினார். அவ்வாறே இருவரும் ரங்கனிடம் வேண்டினர். தம் அடியவர் வேண்ட ரங்கன் செவி சாய்க்காமல் இருப்பானா? ஸ்ரீரங்கனே அந்த அர்ச்சகர் மூலம் பேசும் அளவிற்கு அவரை திருத்தி பணி கொண்டார். பின்பொரு சமயம் அழகிய மணவாளர் சந்நியாசம் ஏற்று தமது பெயரை சடகோப ஜீயர் என்று மாற்றிக்கொண்டார். இது ஸ்ரீரங்கனுக்கு ஏற்புடையதாக இல்லை. அதனால் ஸ்ரீரங்கநாதர் உத்தம நம்பி என்ற அந்த அர்ச்சகர் மூலம்," இந்த அழகிய

மணவாள ஜீயரை அந்த மடத்தில் இருக்க சொல்லவும்," என்று இரண்டு முறை சொன்னார். அப்போது மணவாளருக்கு புரிந்து விட்டது ரங்கனுக்கு சடகோப ஜீயர் என்பது ஏற்புடையதாக இல்லை என்று..அதனால் தமது நாமத்தை அழகிய மணவாள ஜீயர் என்றே வைத்துக்கொண்டார்.

எந்த அர்ச்சகரை திருத்தி பணிக்கொள்ளவேண்டும் என்று ரங்கனிடம் வேண்டினாரோ அவர் மூலமாகவே அரங்கன் மணவாளரிடம் பேசி அவரது விண்ணப்பத்தை ஏற்றார் என்பதை எல்லோரும் அறியும் வண்ணம் புலப்படுத்தினார். இதை ரங்கனின் கருணை, எளிமை அல்லது வேறு என்ன வென்று சொல்லுவது.

மணவாள மாமுனிகளுக்கு "முப்பத்தாறாயிரப்படி பெருக்கர் " என்றும் பெயருண்டு. இது அருளிச் செயல்களின் வ்யாக்யானமாகும். இதற்கு ஈடு என்றும் பெயருண்டு. தமிழில் மிகவும் அழகாகவும் தெளிவாகவும் வ்யாக்யானம் செய்யும் திறம் கொண்டவர்.

.**"மாற்றற்ற செம்பொன் மணவளமாமுனி வந்திலலேன்**

**ஆற்றில் கரைத்த புளி அல்லவோ தமிழ் ஆரணமே,"** என்று கூறுவர்.

இந்த அழகை ரங்கன் தானும் அனுபவிக்க வேண்டும் என்றெண்ணி ஒரு வருட காலம் தம் உற்சவத்தை நிறுத்தி ஈடு வ்யாகானம் கேட்க முனிகளிடம் விண்ணப்பித்தார். மணவாளரும் அரங்கனின் ஆணையை ஏற்று ஈடு முப்பத்தாறாயிரப்படி வ்யாக்யானம் செய்தார். சாற்றுமுறை நாளன்று ஸ்ரீரங்கனே, ஸ்ரீரங்கம் என்ற ஐந்து வயது சிறுவனாக வந்து "ஸ்ரீ சைலேச தயாபாத்ரம்" என்ற தனியனைப் பாடி மணவாள மாமுனிகளை தன் ஆச்சார்யனாக ஏற்று தான் அவருக்கு சிஷ்யரானார். ஸ்ரீ வைஷ்ணவ குரு பரம்பரையை கூறும்போது இந்த தனியனை தான் முதலில் சேவிக்கிறோம். மணவாள மாமுனிகளை பெரிய ஜீயர் என்றும் போற்றுகிறோம். அது மட்டுமல்லாமல் மாமுனிகள் திருநாடு எழுந்தருளிய போது அதாவது ஆச்சார்ய திருவடியை அடைந்த போது ஒரு சிஷ்யன் குருவுக்கு செய்வது போன்று தமது குருவாகிய அழகிய மணவாளருக்கு அந்திம காரியம் செய்தார் .இன்றளவும் மணவாள மாமுனிகள் திருநாடு எழுந்தருளிய தினத்தன்று (மாசி

மாதம் கிருஷ்ண துவாதசி) நம்பெருமாள் தனது பிரசாதங்களையும், திருவடிநிலைகளையும் மாமுனிகள் திருமடத்திற்கு அனுப்பி வைக்கிறார்.

மணவாள மாமுனிகளும் தாமே ஒரு ஆச்சார்யராக இருப்பினும் தாம் யதீந்திர ப்ரவணர் என்பதற்கிணங்க தாம் அருளிய ஆர்த்தி ப்ரபந்தம் என்ற நூலில், "**வாழி எதிராசன் வாழி எதிராசன் .... தாளிணையில் தாழ்த்துவார் விண்ணோர் தலை**" என்று இராமானுஜரை சரண் புகுகிறார். ஆச்சார்யன் திருவடிகளைப் பற்றுவதாலேயே ஜீவன் முக்தர்கள் ஆகலாம் என்று நமக்கு உணர்த்துகிறார்.

ஸ்ரீரங்கன் எத்தனை கருணையும் எளிமையும் உடையவனோ அவன் தாளிணையைப் பற்றிய இரு பெரும் ஆச்சார்யர்களும் கருணையும் எளிமையும் உடையவர்கள் என்பது தெள்ளிய நீர் போன்று அவர்களது வாழ்க்கை நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

இவ்விரு மகான்களின் வாழ்க்கை வரலாற்றின் மூலம் ஸ்ரீரங்கநாதன் எவ்வளவு பெரியவனாக இருப்பினும் தூய்மையான பக்தி கொண்ட தன் அடியவருக்கு மிகவும் எளியன் என்பது நமக்கு செவ்வனே புலப்படுகிறது.

ஆழ்வார் ! எம்பெருமானார் ! ஜீயர் திருவடிகளே சரணம் !!!!!

**அடியோங்கள்**

**சுதா முரளிதர்**

**சுசித்ரா அரவிந்த்ரமேஷ்**